Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி௵ (1889) ஆவணி௴ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது — தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௯] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ ஆவணி௴ ௨௧௳ வெள்ளிக்கிழமை (6 SEPT. 1957) [இல-௨௨]

## இலங்கையிற் பனை மகோற்சவம்

———:0:———

### ஒருமாதம் (1-9-57—2-10-57) கொண்டாட்டம்
### எல்லோரும் ஈடுபடுக

தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வின் அடித்தளம் பனைமரமே! பனையின்றி வாழ்வில்லை. ஏழைகளின் கதி பனையே! பனையுள்ள நாட்டில் பஞ்சமில்லை. ஏழைகளுக்குக் கூழும் குடிலும் குறையாது வழங்கி இரட்சிக்கும் கற்பகதரு பனை.

காடுகளை அழிக்க விட்டோம். பெரிய பெரிய விருட்சங்களை யெல்லாம் வீழ்த்தினோம். விளைந்தது என்ன? மழையில்லாப் பாலைவனமாக நாடு மாறிவிட்டது. எஞ்சி நிற்கும் பனைகளையும் அழித்து வருகின்றோம். அடுத்த 25 வருடத்தில் பனைகளையே காணமுடியாத வனாந்தரமாக நம்நாடு காட்சியளிக்கப் போகின்றது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு நாம் அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

மகாத்மா காந்தியடிகள் பிறந்த தினமாகிய ஐப்பசி (ஒக்டோபர்) 2-ந் திகதியை பனை மகோற்சவ தினமாக அகில இலங்கைக் காந்தீய சேவாசங்கம் தொடர்ந்து கொண்டாடி வருகின்றது. இந்தவருடம் பனை மகோற்சவத்தை மிகவும் விரிவுபடுத்தி தீவிரமாக - சாதனை ரீதியாக புரட்டாதி (செப்ரம்பர்) 1-ந் திகதி தொடக்கம் ஐப்பசி (ஒக்டோபர் 2-ந் திகதி வரையும் கொண்டாட வேண்டும். இதனால் மக்களிடையே சுதேசி இயக்கம் விருத்தியடையும், பொருளாதாரப் புரட்சிச்சிந்தனைகள் வளர்ச்சியடையும்.

ஒவ்வொருவரும் 10 பனம் விதைகளாவது வேலி எல்லைகளிலும் வெற்றிடங்களிலும் நாட்டுவதுடன் 'பனை உணவு' வகைகளை அன்பர்களுடன் சேர்ந்து உண்ண வேண்டும், பனை உணவின் மகத்துவத்துவத்தைப்பற்றிப் பிரசாரம் செய்யவேண்டும்.

எங்கள் நாட்டின் ஏழ்மையைப் போக்கிப் பொருளாதார விருத்தி செய்வதற்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும் 'பனை வெல்லம்; 'பனம் சீனி' முதலியவற்றையும் 'நீரா' போன்ற பானங்களையும் உற்பத்தி செய்யும் கிராமக் கைத்தொழில்களை விருத்தி செய்ய வேண்டிய அவசியத்தைப் பகிரங்கப்படுத்திப் பிரசாரம் செய்தல் வேண்டும்.

பனை தேசிய வருமானத்துக்குரிய ஒரு விருட்சமென்பதை எடுத்துக் காட்டுவதற்காகப் பனை மரத்தின் படம் பொருந்திய ஒரு முத்திரையும் ஒரு பணத்தாளு (நோட்டு)ம் அரசாங்கத்தால் வெளியிடப்பட வேண்டும் என்பதை வற்புறுத்திப் பிரசாரம் செய்ய வேண்டும்.

பாடசாலைகளிலும் சங்கங்கள் சபைகளிலும் கட்டுரைப் போட்டி பேச்சுப் போட்டிகளை ஏற்படுத்தி மாணவர்களையும் ஏனைய மக்களையும் இத்துறையில் ஈடுபடச்செய்ய வேண்டும்.

பனை மகோற்சவ நோக்கத்தை விருத்தி செய்யும் முறையில் வேறு சில சேவைகளும் செய்ய வேண்டும். வெளிநாடுகளிலிருந்து வரும் இயந்திரத் தயாரிப்புப் பொருட்களைப்பகிஷ்கரிக்கவேண்டுமென்றும் அவற்றிற்குப் பதிலாக உள்நாட்டில் கிராமக் கைத்தொழிற் பொருட்களை உற்பத்தி செய்தல், உபயோகித்தல் வேண்டுமென்றும் இதுதான் உண்மையான சுதேசி இயக்கம் என்றும் பகிரங்கப்படுத்திப் பிரசாரம் செய்ய வேண்டும்.

மக்களிடையே ஏற்றம், தாழ்வு துவேஷம், போட்டி, பொருமை என்பவையற்ற சர்வோதய சமுதாயத்தை அமைப்பதற்காகக் காந்தியடிகள் கருத்த ஆக்க வேலைத்திட்டங்களில் நம்பிக்கை கொண்டு கிராமீய பஞ்சாயத்து சீவிய முறைகள் மீண்டும் வளர்ச்சி பெற்றுச் சாசுவதமான சமாதான நிலை ஏற்படுவதற்காகத் தேசியக் கருத்துக்களுக்குப் புத்துயிரளிக்க வேண்டும். புரட்டாதி (செப்ரம்பர்) 11ம் திகதி ஆசார்ய வினோபாஜீயினுடைய பிறந்த தினவிழாவையும், பாரதி தினத்தையும் ஐப்பசி (ஒக்ரோபர்) 2ம் திகதி மகாத்மா காந்தியடிகளுடைய [illegible]கிலமாகிய 89 வது 'சர்க்கா ஜெயந்தி' விழாவையும் கொண்டாடி இம் மகான்களின் போதனைகளையும் வாழ்க்கை முறைகளையும் நினைவு கூர வேண்டும். நூல்நூற்றல், சமூகப் பிரார்த்தனை, சமூக விருந்து முதலிய வைபவங்களை ஏற்படுத்திக் காந்தீய சர்வோதயக் கருத்துக்கள் பற்றிக் கலந்துரையாடல் வேண்டும்.

இந்தப் பனை மகோற்சவ மாதத்தில் ஏதாவது ஒரு தினத்திலாவது கல்விநிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விவசாயக் கழகங்கள், ஏனைய பொது ஸ்தாபனங்கள் யாவும் கொண்டாட்டத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்

அகில இலங்கையிலும் பனை விதைகளை நாட்டிப் பனப்-சுதேசிப் பொருட்களை உபயோகித்து கிராமங்கள் தோறும் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடாத்திப் பனை மகோற்சவத்தைக் கொண்டாடுங்கள்.

பனைகளைப்போற்றி வளர்த்துபயோகிப்பது சர்வோதயம் அல்லது அனைவரின் மேம்பாடு. இயற்கையளித்த செல்வம் பனை. 'பனை வெல்லம் சத்துள்ளது. ஆரோக்கியம் நிறைந்தது. பனை உணவுகளையே அதிகமாக உண்ணுங்கள். பனைகளை எங்கும் பயிரிடுக.

(குறிப்பு:- பனை மகோற்சவம் சிவரொட்டிகள் வேண்டுவோர் நமக்கு எழுதிப் பெறலாம்)

செ. துரைசிங்கம்
பொதுச்செயலாளர்
அ. இ. கா. சே. சங்கம்,
காந்திநகர், நீர்வேலி P. O.

---

எக்காலத்தவருக்கும்

## யாவருக்கும் உரியவை

———0———

### எல்லாச் சமயப் பொருள்களையும் விளக்கி ஒற்றுமை வாழ்வுக்கு வழி காட்டுவன

### வேதபாஷ்ய மகாநாட்டில் விளக்கம்

இந்துக் கலாசாரம் வேதப் பொருள்களாகிய உரத்த அத்திபாரத்திற் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. வேதங்களோ மக்கட் பிறவியினரின் மகோன்னத பிறப்புரிமையாய் விளங்குவன. அவற்றின் பொருள்கள் சாதாரண மனிதர் விளங்கமுடியாத வகையில் அமைக்கப்பெற்றுள்ளன. அவ்வுண்மைகள் என்றென்றும் உண்மையானவை.

ஆதி அந்தம் அற்றவை. இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று வாழும் வழியை வேதங்கள் எமக்குக் காட்டுகின்றன. மந்திரங்கள் பிரமாணங்கள்என வேதங்கள் இரு பிரிவாயுள்ளன. அவற்றை, இருக்கு யசுர், சாமம், அதர்வணம் என நான்காக வகுத்தார் வியாசமுனிவர். வேதங்களை நான்காக வகுத்த பொழுது யக்ஞங்களையே விசேடமாகத் தமது மனக்கண்முன்பு அவர்வைத்திருந்தார். ஒரு பரம்பொருளே உருத்திரன், அக்கிமுதலிய பல பெயர்களால் வேதங்களிற் போற்றப்படுகின்றது. கர்மம், பக்தி ஞானம் ஆகியவை இருக்கு வேதத்தில் விளக்கப்பட்டுள்ளன. மனிதன் மேன்மையடைதற்கு வேண்டிய விலைமதிப்பில்லாக் கொள்கைகளை இருக்குவேதம் விளக்குகின்றது.

மக்களின் வாழ்க்கைச் சரித்திரத்தில் மிகமேலான இடத்தை வேதங்கள் பெற்றுள்ளன என்னும் உண்மையை எவரும் மறுக்க முடியாது. பிற நூல்கள் போல் குறித்த ஒரு காலத்துக்கோ, குறித்த ஒரு சாதியாருக்கோ அமையாது எக்காலத்துக்கும் எல்லோருக்கும் உரியவையாய் வேதங்கள் அமைந்து விளங்குகின்றன. தர்மம் அர்த்தம், காமம், மோட்சம் ஆகிய நான்கு புருடார்த்தங்களையும் வேதங்கள் விளக்குகின்றன.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

---

சைவத்தின்

## தனிச் சிறப்பு

### ஆலயங்களே பெரியோரை உருவாக்கின

சைவ சித்தாந்தம் என்பதுபற்றி உலகில் பலருக்குத் தெரியாது. அதற்குக் காரணம் தமிழ் மக்களின் சோம்பலே, அவர்கள் தம் அருமைவாய்ந்த பொக்கிஷங்களை மறந்திருந்தமையும் காரணமாயிருக்கலாம். சைவ சித்தாந்தக் காட்சியைக் கண்டு தாய்நாட்டிலும் பரப்பியவர் ஆறுமுக நாவலர். அவர் தமிழர் பெருமைப்படத்தக்க ஒரு நிலையைத் தேடித் தந்திருக்கிறார்.

சைவத்தில் வேதம் ஆகமம் இரண்டும் அடங்கும். இயந்திரங்களுக் கெல்லாம் இயந்திரமான உடம்பை நமக்குத் தந்த இறைவனை நாம் மறந்து வாழும் வாழ்வு நரக வாழ்வு. அவனை நினைத்து வாழும் வாழ்வு தெய்வ வாழ்வு. கடவுள் உண்டென ஏற்றுக்கொள்பவர்களிடத்தும் தத்துவ வேறுபாடுடைய பல கூட்டத்தினர் உண்டு. உலோ[illegible] [illegible] என்ப் பல வகையினர் உளர்.

எல்லாம் வல்ல இறைவன் அங்கும் இருக்கிறார், இங்கும் இருக்கிறார். இந்த அடிப்படையான கொள்கை சைவ மக்களிடத்துண்டு.

சைவம்பற்றி ஒரு சிறப்பான அம்சத்தை இங்கு நான் சொல்வேன். மேல் நாட்டில் பெரியோர்களைப் பல்கலைக் கழகங்கள் உருவாக்கின. சைவ மக்களிடையே பெரியோர்களை உருவாக்கிய பெருமை ஆலயங்களுக் குண்டு. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் நாவலர் பெருமானை உருவாக்கித் தந்தது. சைவ மக்களாகிய நாம் பெரிய அனுபவங்களை உணர்ந்து தமிழ் மொழிக்காக உயிர் விடவேண்டியிருப்பது அதற்கும் சைவத்துக்கும் உள்ள தொடர்பேயாகும். தமிழில் இருப்பதுபோன்ற சிறந்த சமயச் சொற்கள் வேறுமொழிகளில் இல்லை.

சைவம் எவ்வளவோ தூரம் பௌத்த சமயத்தை வளர்த்திருக்கிறது. அத்தகைய பெருமை மிக்க சமயத்தையறியாது இருழ் சூழ்ந்த நிலையில் இருப்பது பரிதாபத்துக்கிடமானது என்று கீரிமலையில் நடந்த அகில இலங்கைச் சைவமகாநாட்டில் சைவ சித்தாந்தம் என்னும் பொருள்பற்றி திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் பேசும் போது கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஏவிளம்பி ஸ்ரீ ஆவணி மீ
உகஉ வெள்ளிக்கிழமை

## அவரவர் அறிந்தபடி அமைச்சு!

எண்ணம் ஒன்று, இயங்குதல் ஒரே வழியில், இயம்புதல் ஒற்றைக் குரலில் என்ற வகையில் அமைச்சர் அவை அமைந்திருத்தல் வேண்டும் என்பது அரசியல் மரபு. முடி மன்னன் தன்னெண்ணப்படி நடப்பது முறையாகாது என்று குடியாட்சி வகுத்த அறிஞர்கள் அமைச்சர்களின் ஆலோசனைகள் யாவும் ஒருநெறிப்பட்டனவாயமைதல் வேண்டும் என்ற முறையைக் கூட்டுப் பொறுப்புணர்ச்சி எனக் காட்டி அந்த மனஒழுக்கம் மொழியிலும் செயலிலும் அமைதல் இன்றியமையாதென விளக்கியிருக்கின்றார்கள்.

ஈழத்தில் மக்கள் ஆட்சி நிறுவப்பெற்ற நாள் முதலாக அமைச்சர்கள் அரசியல் மரபைத் தழுவி ஒழுகவில்லையென்றே அரசியல் ஆராய்வாளர்கள் எழுதுகின்றார்கள். இந்த நிலைமைக்கு மந்திரி சபையின் அமைப்பேகாரணம்என்று கூறுவது பிழையாகாது. பாராளுமன்றத்திற்புகுந்துவிட்டாற் போதும் என்று அரசியல் வாழ்க்கையில் அடியெடுத்து வைப்பவர்கள பலவேறு நியாயங்களால் அமைச்சர்களாகவும் நேரடியாக நியமிக்கப்படுகின்றார்கள். அன்னவர்கள் எல்லாரும் நன்னோக்குடையவர்களாய் அமைதல் அரிதே. எனவே அமைச்சர்கள் பலவேறு எண்ணங்களுள்ளவர்களாய்க் காணப்படுகின்றார்கள். அன்றியும் தங்கள் வேற்றுமைகளை வெளியுலகறியும்படி காற்றுவாய்த் தூற்றிவிடுகின்றார்கள். இத்தகைய நிலைமையில் இருக்கின்றது பண்டாரநாயகவின் தலைமையில் இயங்குகின்றஅமைச்சு.

மொழியைப்பற்றிய உடன்பாட்டிலே ஆட்சியாளர்கள் எண்ணம் ஒருதிறப்பட்டதாயிருக்குமென்றே கருதவேண்டிய நிலைமையில் மந்திரியார் தகநாயகவின் விளக்கம் விந்தையாயிருப்பதோடமையாது முதல் அமைச்சரின் கருத்துக்கு மாறுபாடாயுமுள்ளதென, திரு. செல்வநாயகம் அவர்களே கூறவேண்டி வந்ததை நோக்கும் பொழுது, அமைச்சர்கள் ஒருவரோடொருவர் கலந்தாலோசித்து உள்ளதை உள்ளவாறுணர்ந்து அவ்வண்ணஞ் செயலாற்றும்நெறி மக்கள் ஐக்கிய முன்னணி மந்திரிமார்களிடத்திலில்லை என்றே எண்ணவேண்டியிருக்கின்றது.

சுகாதார மந்திரியார் பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும் கண்டித்துப் பேசியது தகாதென திரு. பண்டாரநாயக ஆட்சேபித்ததை ஆராயும் பொழுது ஆட்சிப்பீடம் அங்கும் இங்கும் எங்குமாக ஆடித் தடுமாறிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

கூட்டுப் பொறுப்புணர்ச்சியையுணராதவர்கள் நாட்டை ஆளும் ஆற்றலில்லாதவர்கள் என்று சொல்வது உண்மையே. ஆனாற் பொறுப்புணர்ச்சியில்லாதவர்கள் அமைச்சர்களாய் அமைதல் கேட்டை விளைவிக்கும் என்ற பேருண்மை யீண்டு நோக்கப்படவேண்டியதொன்று. கல்விமுறையைப் பற்றிக் கருத்துவேற்றுமை; மொழி உடன்பாட்டில் விளக்க விபரீதம் நெற் காணிச் சட்டதிட்டத்தில் ஒற்றுமை நோக்கின்மை. சுகாதாரமந்திரியார் ஏனைய அமைச்சர்களின் ஆதரவு பெறாது அலமந்து நிற்றல். நிதியமைச்சுடன் இதர அமைச்சுகள் இயைந்து நடக்க முடியாமை. இவ்வாறு பலவேறு பிணக்குகளுக்குள்ளாயிருக்கும் மக்கள் ஐக்கிய முன்னணி மந்திரிசபை அரசியல் மரபுக்கமையாதிருக்கின்றதென்பது வெளிப்படையாகின்றது.

## வாழ்க்கைவானில்

— வளர்மதி

**வவனியாவின் அரசியற் கவனம்**

அரசியல் ஒழுங்குமுறைகளைக் கண்ணிமை மாறாது கூர்ந்து கவனித்து வருபவர்களிலே தலை சிறந்தவர் திரு. சுந்தரலிங்கம் அவர்கள். அன்னார் இரண்டு கண்டனங்களைப் பாராளுமன்றத்திற் கொணர்ந்தார். ஒன்று சபைத் தலைவர் பாராளுமன்றத்திற் பேச விரும்புவோருக்குப் போதிய வசதி செய்யத் தவறியதாற் பிழை செய்தார் என்பது. அடுத்தது பிரதமர் நாட்டில் அமைதி நிலைமை வழங்க ஆவன செய்யாதுவிட்டனர் என்ற கண்டனம்.

**அநுவதித்தவர் ஆதரிக்கவில்லை**

கண்டனங்களைக் கொண்டு வருவதற்குத் திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் அநுவதித்துதவி செய்தபின் ஆதரிக்காது மௌனஞ் சாதித்தமையும் திருவாளர்கள்: இராசவரோதயமும் அழகக்கோனும் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தாது விட்டதும் விநோத பான்மையாய் விளங்கின. மதில் மீதிருக்கும் காலம் போய்த் திட்டவட்டமாய் நெஞ்சைத்திடப்படுத்த வேண்டிய வேளையில் அங்குமில்லை இங்குமில்லை என்றால் அதன் அர்த்தம் என்னவாகும். ஒப்பந்தம் உண்டானவகையிலே இந்த நிர்ப்பந்தம் தோற்றியது போலும்!

**பாடிகாவலர்பாடு!**

ஆட்சி முறையின் திறமையை அறிவதற்கு நாட்டிற் கொலைக் குற்றத்தின் எண் கணக்கை ஆராய்வ தவசியம். என்றுமில்லாத வகையிற் கொலைகள் நிகழ்கின்றனவென்றால் மக்கள் ஐக்கிய முன்னணியாட்சியில் மக்கள் நிலைமை எவ்வாறிருக்கின்றதுஎன்பதையறியலாம். எமனை வெருட்டும் எமன்போலப் பாடிகாவலரைத் தேடிக்கொலைபுரியும் எமன்கள் மக்கள் ஆட்சியில் மலிந்து காணப்படுகின்றனர். ஆட்சியின் மாட்சிக்குச் சாட்சியா?

அரசியல் அலை

## கூட்டுப் பொறுப்புக்கு உடன்படமாட்டாதநிலை!

### ம, ஐ முன்னணியை விட்டு மந்திரியார் விலகுவாரா?

மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்களின் அரசியற் சிக்கல் சொல்லுந் தரத்ததல்ல. இப்பொழுது மந்திரியார் விமலா விசயவர்தனவும் ஆட்சி முறையை நிந்தித்துவிட்டார் பகிரங்கமாக. ஆனாற் பிரதமர் வேதாந்தம் பேசிய வண்ணமேயிருக்கின்றார். கூட்டுப் பொறுப்புணர்ச்சியில்லாத அமைச்சு ஆட்சி நடத்துவதாகில் நாட்டின் கதி என்ன?

மலாயாவிலிருந்து திரும்பிய பிரதமர் மனம் ஆறுதலடைய முன், சுகாதார மந்திரியாரின் செயல் ஆகாதென்று கண்டிக்கநேர்ந்துவிட்டது. மந்திரிப் பதவியை விட்டு விலகிவிடலாமே என்று சொல்லாமற் சொல்லிப் பயமுறுத்துகின்றாரேயன்றி முதலமைச்சர் ஆட்சி பீடத்தில் உள்ள குற்றங்களை ஒழிப்பதற்கு வழி தேடுகின்றாரில்லையே!

மந்திரியார் விமலா விசயவர்த்தன பதவியை விட்டு நீங்குவதா கட்சியினின்றும் விலகுவதா எது நடக்கும் என்றும் அரசியற் குழப்ப விருப்பர்கள் எதிர் பார்த்த வண்ணம் இருக்கின்றனர்.

வானொலியிற் பிரதமர் பேசிய கட்சிக் கண்டனப் பேச்சு எவ்வாற்றானும் அரசியல் மரபுக்கமைந்ததென்றே வாதாடுகின்றார் திரு. பண்டாரநாயக. எதைத்தான் அவர் சரியல்ல என்று ஒப்புக்கொண்டது?

## முருகனிடம் முறையிட்டுப் பெருங் கருணைபெறுவோம்

**செல்வச்சந்நிதி தேர்: ஆவணி ஞாயிறு 23**

கலியுக வரதராகிய சுப்பிரமணியப் பெருமான் நமது தமிழ்த் தெய்வம். நமக்கு வேண்டுவனவற்றையநுக்கிரகிப்பவர்; போகமோக்ஷமாகிய இரண்டினுக்குந் தலைவர்; அஞ்ஞானமாகிய இருளைக் கடிந்து ஞானவொளியைத் தரும் பரமாசாரியர். ஆதலினாலே, நாம் நமக்காகவும் பிறர்க்காகவும் செய்யவெண்ணிச் சங்கற்பிக்கின்ற நற்கருமமனைத்திற்கும் சுப்பிரமணியப் பெருமானது நல்லருளைத் துணையாகக் கொள்வோமாக.



சூரனாலிடருற்ற தேவர்கள், அந்தகாரமாகிய பேரிருளிடைப்பட்டுத் தன்புறுங்கால்,

"நண்ணினர்க் கினியா யோலம்
ஞானநா யகனே யோலம்,
பண்ணவர்க் கிறையே யோலம்
பரஞ்சுட ருருவே யோலம்
எண்ணுதற் கரியா யோலம்
யாவையும் படைத்தா யோலம்
கண்ணுதற் பெருமா னல்குங்
கடவுளே யோல மோலம்".

எனத் துதித்துத் துன்ப நீங்கி யின்புற்றனர்

பலவகைப்பட்ட இன்னலாலுப நெருக்குண்டு நிலை கலங்கியிருக்கும் நமது சமூக வாழ்க்கையை நோக்குங்கால் நமது நிலை சூரனாதியோரால் துன்புற்ற தேவர் நிலையினும் மிகக் கொடிது. நமது இழிவு இத்தகையதென்றுணருகிற உணர்ச்சிதானும் நம்மவருக்கில்லை. இத்தகைய பரிதபிக்கத்தக்கநிலையினில்நிற்போராகிய யாம் எமது தெய்வமாகிய முருகனிடம் முறையிட்டு அவனுடைய பெருங் கருணையினால் மனத்தில் உற்சாகம் எய்தப்பெற்று நம்மையுஞ் சீர்ப்படுத்தி நம்மைச் சார்ந்த பிறரையுஞ் சீர்ப்படுத்துவோமாக.

— சுவாமி விபுலானந்தர்.

("விவேகானந்தன்" குரோதி ஸ்ரீ தைமீ 1926.

### உருசிய உபக்கிரகம்

—0—

நாம் வாழும் மண்ணுலகின் பாங்கரில் ஓர் உபக்கிரகத்தை ஆக்கி உலாவச் செய்வதாக அமெரிக்க விஞ்ஞானிகள்சிறிதுகாலத்துக்கு முன் சொன்னார்கள்.

இந்த ஆண்டு முடிவடைதற்கு முன்னரே அப்படி ஒன்றைத் தாம் வெளியிடுவதாகச் சொல்லுகின்றார் இப்பொழுது உருசிய விஞ்ஞானி கலாநிதி ஐவன் பார்தின்.

### காஷ்மீர்பற்றி முஸ்லிம் தலைவரின் கருத்து

—0—

காஷ்மீர் இந்தியாவின் ஓர் பகுதியாயுள்ளது. காஷ்மீர்ப் பிரச்சினையில் இந்தியாவை ஆதரியுங்கள் என்று முஸ்லிம்களின் ஆத்மீகத் தலைவரான நவாப் ஜாம்ஷெட் அலிகான் அசாத் காஷ்மீரில் வசிக்கும் முஸ்லிம்களுக்கும் இந்திய முஸ்லிம்களுக்கும் அறிவுரை கூறியுள்ளார்.

### அகில இலங்கைச் சைவஇளைஞர் மகாசபை

—0—

இம்மகாசபைத் தலைவராக மீண்டும் திரு. வீ வீரசிங்கம் B. A. அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். உபதலைவர்கள்: திரு. மு. ஞானப்பிரகாசம் B. A. BSc., திரு. து. ஜெயரத்தினம் B. A., திரு. வெ. நடராசா B Sc. (கூட்டுறவு ஆணையாளர்), திரு. சே. தியாகராசா (வித்தியாதரிசி), திரு. நம சிவப்பிரகாசம், செயலாளர்: பண்டிதர் வே, சங்கரப்பிள்ளை.

### யாழ். மாநகரசபை எல்லை மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லையை அகலச்செய்யும் நோக்கமாக நல்லூர் கொக்குவில் என்னும இரு கிராமச் சங்கங்களையும் மாநகரசபையுடன் இணைப்பது நன்று என்று முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள் மாநகரசபைக் கூட்டததிற் கொணர்ந்த யோசனை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### குருமாரைக் கனம்பண்ண வேண்டும்

—0—

தொண்டமானாறு சைவாங்கில வித்தியாசாலையில் கிராமத்தலைவர்கள் தொண்டர்குழுவினர் வகுப்பைத் தொடக்கிப் பேசும்போது குருமார்கள் அணியும் வெளிச் சின்னங்களை மற்றச் சமயத்தவர்கள் கனம் பண்ணுகின்றார்கள். சைவ சமயத்தவர்களும் அவ்வாறு சமயக் குருமாரைக் கனம்பண்ண வேண்டும் என்று அரசாங்க அதிபர் ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா அவர்கள் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## இசைவாது வென்ற படலம்

இன்று இசைவாது வென்ற படலம். சுருக்கம் எழுதி வந்தீர்களா? (ஆம்). சரி நீர் எழுதிய சுருக்கத்தை வாசியும் பார்ப்போம் மற்றவர்கள் நீங்கள்எழுதிய சுருக்கத்தோடு ஒப்பு நோக்கிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

'வரகுண பாண்டியனுக்குப் பின்னர் இராசராச பாண்டியன் அரசியற்றினன். அவனுக்கு மனைவியர்களும் காயக் கிழத்தியர்களும் பலர் காமக்கிழத்தியர்களுள் ஒருத்தி அவனுக்கு உயிர் போன்றவள். கீதத்தில் வல்லவள். அதனாலே பாணபத்திரன் மனைவிக்கும் அவளுக்கும் பகை. பாணபத்திரனது மனைவியின் செருக்கையடக்குமாறு பாண்டியனை வேண்டினள்.

ஈழநாட்டு விறலியொருத்தியை இராசராசன் அழைத்தான். இருவரையும் இசைவாது புரியச் செய்தான். விறலி சில வினாவிடைகளை யெழுப்பி உத்தரஞ் சொல்லுமாறு பத்திரன் மனைவியைக் கேட்டாள். "நான் இசைவாதுக்கு வந்தேனேயன்றி வசைவாதுக்கு வரவில்லை" என்றாள் பத்திரன் மனைவி, பாண்டியன் விலக்குவான் போல விலக்கிப் "பாருங்கள் தோற்றவர் வென்றவருக்கு அடிமையாவதே சபதம்" என்றான். விறலி முதலிற் பாடினாள். பத்திரன் மனைவி பின்னர்ப் பாடினாள். விறலியை மன்னன் புகழ்ந்தான். அவன் கருத்தையறியாத சபையோர் பத்திரன் மனைவியைப்புகழ்ந்தனர். மறுநாள் மீண்டும் தொடங்கியது மன்னன் விறலியையே புகழ்ந்தான். சபையோரும் அரசன் பக்கமே சார்ந்து கூறினர். பார்த்தாள் மன்னனைப் பத்திரன் மனைவி, "மன்னனே! நீ ஓரம் பேசுகின்றாய்; அதனால் சபையோரும் அதனையே உரைக்கின்றனர். சோமசுந்தரப் பெருமான் சந்நிதியிற் சென்று பாடவேண்டும், வெற்றியும் தோல்வியும் அங்கு விளங்கும்" என்றாள்.

மூன்றாம்நாள் சோமசுந்தரப் பெருமான் சந்நிதியில் இசைப்போட்டி நடந்தது. சபையிலே சோமசுந்தரக் கடவுளும் ஒரு வித்துவான் போல எழுந்தருளி யிருந்தார் விறலி பாடினாள் முதலில். சபையிலே மௌனம். பத்திரன் மனைவி எடுத்தாள் யாழை, பாடினாள் இன்னிசை. மகிழ்ந்தனர் சபையோர். முன் போலவே சொல்ல எழுந்தான் பாண்டியன். மனத் தடுமாற்றத்தினால் "பத்திரன் மனைவியே வென்றாள்" என்றான். அற்புதம்! அற்புதம்! என்று கூறி மறைந்தருளினார் சிவபெருமான். சபதம் நிறைவேறியது. பத்திரன் மனைவி வென்றாள். "மன்னன் வலிமைகள் தெய்வங்களின் வலிமைக்கு முன் நில்லா; தெய்வங்களின் வலிமைகள் சிவபெருமான் வலிமைக்கு முன் நில்லா" என்பதை பாண்டியன் உணர்ந்தான்.

பாணபத்திரனுடைய மனைவி யாழ்கொண்டு சிவபெருமானைப் பாடிய பாடல்கள் மிகவும் அருமையானவை நீங்களும் இப்பாடல்களை மனனம்செய்து பாடுதல் நல்லது.

முதலாவது செய்யுளின் பொருளைப் பாருங்கள்.

மதுரையி லெழுந்தருளிய பெருமானே! அகங்கையளவு நீரையும் பச்சிலையையுமிட்டு வழிபடும் அடியார்கட்கு, ஐராவதத்தையும் சேஷசயனத்தையும், தாமரைத் தவிசையுந் தந்தருளுவாய். சேஷசயனத்தையும், தாமரைத் தவிசையும் தந்தருளும் நீயே, திருக்கரத்திற் கபாலத்தைத் தாங்கித் (தாருகாவனமுனிவர்) வீடுகடோறும் இரக்கின்றா யென்று இகழுவார்க்கு யான் யாதினைக் கூறுவேன்.

அடுத்த செய்யுள்:

மதுரையி லெழுந்தருளிய நமது பரமனே! தேன் போலுஞ் சுவை பொருந்திய மொழியையுடைய மாதர்களது கட்பார்வையின் வழியே செல்லாத சிவயோகிகட்கே மோட்சமென்று, பலவகைப்பட்ட வேதப்பொருளை விரித்துக் கூறிய நீயே இடப்பாதி பெண்ணுருவாயினை யெனப் பிறர் இகழ்ந்தால் அடியேன் யாது கூறுவேன்.

இறுதிச் செய்யுள், மூன்றாவது;

மதுரையி லெழுந்தருளிய ஒப்பிலாத முதற் கடவுளே! அருட் கொடையை யுடையனாகிய எல்லாவுயிர்கட்கும் மாயாமலத்தின் விருத்தி வன்மையை யடக்கி நித்தியமான மோட்ச வின்பத்தைத் தந்தருளுகின்ற நீயே மோட்ச வின்பத்தை நுகர்வார்போல நோன்பாகிய யோக நிலையைக் கைக்கொண்டருளினை என்பார்க்கு நான் யாது கூறுவேன் என்பதாம்.

இப்பாடத்தினால் நாம் என்ன அறிகின்றோம்? 'மன்னன் வலிமைகள் தெய்வங்களின் வலிமைக்குமுன் நில்லாஎன்பதையும் தெய்வங்களின் வலிமைகள் சிவபெருமான் வலிமைக்கு முன் நில்லா என்பதையும் படித்துக் கொள்ளுகின்றோம்.

அடுத்தபாடம் பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம் அதனையும், பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலத்தையும் அடுத்த பாடத்தில் படிப்போம்.

# மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம்

## பழைய மாணக்கர் முதலியோர் மீதுள்ள கடமை

முற்றொடர்

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

இப்பாடசாலை ஆரம்ப காலம் தொடக்மம் அரசினர் நன்கொடையைப் பெறும்வரையும் காலம் சென்ற சைவத்திருவாளர் த. கந்தையா உபாத்தியாயர் அவர்களும் இடையிடையே இப்பாடசாலையின் பொருட்டு மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தனர். ஆறும்வகுப்புவரையும் இருந்தது. தலைமையாசிரியர் பெரும் ஊக்கத்தோடு பாடசாலையை நடத்தினார்கள். இடையிடையே பாடசாலை விஷயங்களிற் பல இடர்களும் விளைந்தன. அதனால் பாடசாலை வகுப்பும் குறைந்தது ஐந்தாம் வகுப்பு மாத்திர மிருந்தது. அதன் பின் தலைமையாசிரியர் அஞ்சாநெஞ்சத்துடன் பேருக்கம் கொண்டு நடாத்தி இதை ஓர் கனிஷ்ட பாடசாலையாக்கினர். அன்னார் இப்பாடசாலை ஆரம்ப காலம் தொடக்கம் 9 ஆண்டுகள்வரையும் கடமையாற்றி வேறுபாடசாலைக்குமாறிச் சென்றனர். இவ்வொன்பது ஆண்டுக்குள் பாடசாலை சமய வளர்ச்சியில் நன்கு முன்னேறிற்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயா எழுதிய சைவவினுவிடைகள் பெரியபுராண வசனம், பாலபாடங்கள் முதலியனவும் திருமுறைகளும் திரு. சிவபாதசுந்தர ஐயா எழுதிய சைவபோதங்களும் பிறபல சைவ நூல்களும் இப்பாடசாலையில் கற்பிக்கப்பட்டன. அதுவுமல்லாமல் கொழும்பு விவேகானந்தசபையாரின் சமயப்பாடப் பரீட்சைக்குரிய பாடங்களும் கற்பிக்கப்பட்டுச் சபையாரின் பரீட்சைக்கு மாணவரைத் தோற்றச்செய்தனர் சமய பாடத்தில் இப்பாடசாலை ஏனைய தமிழ்ச் சைவப்பாடசாலைகளுக்கு ஒரு முன்மாதிரியாயிருந்தது. இக்கிராமத்தில் இளைஞர்களின் சைவத் தொண்டுக்கு வித்திட்ட பாடசாலையும் இதுவேயாகும். இத்தகைய பாடசாலைஇப்போது சைவசாதனை குன்றி விவேகானந்த சமயபாடப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றாது பலகாலம் இருந்து வருதலும் வருந்துதற்குரியதாகும். கட்டடத்தின் பல மரவேலை பழுதுபட்டிருக்கின்றன. இவை திருத்தப்படல்வேண்டும். பழைய மாணவர்கள் பலர் மிக மேலானநிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் இப்பாடசாலைக்குஆவனசெய்ய வேண்டும். அதுவுமல்லாமல் வருங்காலம் இப் பாடசாலைக்குச் சமயம் இலக்கியம் தெரிந்த தலைமையாசிரியரை நியமனம் செய்தல் வேண்டும். இதற்குச் சைவவித்தியா விருத்திச் சங்கத்தாரும் ஏற்ற நடவடிக்கை யெடுத்து இப்பாடசாலையைச் செவ்வனே நடைபெறச்செய்தல்வேண்டும். இப்பாடசாலை மேன் மேலும் உயர்ந்து உயர் தமிழ்க் கலாசாலையாக வளர வேண்டும். இதற்குக் கிராமச் சைவ மக்கள் ஆவன செய்ய எல்லாம் வல்ல கௌரியம்பிகா சமேத கேதீச்சரப்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

# கடவுள் உண்மை பற்றிய கேள்வி

## உளர் என்பதை விளக்கும் அறிவுரை

நீங்கள் வசிக்கும் இல்லமாயிருக்கின்றார் இறைவன். அவர் உங்கள் நண்பனாயிருக்கின்றார். அவர்பால் உங்கள் சிந்தையைச் செலுத்துவீர்களானால் நீங்கள் பேரின்பம் பெறுவீர்கள்.

எண்ணெய் இன்றி எவ்வாறு விளக்கு எரியமாட்டாதோ அவ்வாறு கடவுளின்றி மனிதன் சீவிக்க முடியாது. அவர் எந்நேரமும் உங்களுடனிருக்கின்றார். உங்களுக்குள்ளே யிருக்கின்றார்; உங்களுக்கு வழிகாட்டி உங்களை மேல் நிலைக்கு உயர்த்திய படியே யிருக்கின்றார்.

கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் கேட்கின்றனர் நிரீச்சுர வாதிகள். ஆனால் கடவுள் இல்லை என்பதற்கு எப்பொழுதாவது யாராயினும் ஏற்கத்தக்க ஆதாரம் காட்டினாரல்லர். கடவுள் இல்லை என்று கற்றவர்களே சொல்லத் தொடங்கிவிட்டார்கள்.

இவ்வுலகில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் குறித்த ஓர் நியதியின்படியே நடக்கின்றது. அப்படியானால் ஓர் நியதி தானாகவே உண்டாயிற்று என்று சொல்லலாமா? எந்த ஒரு நியதியும் சூனியத்திலிருந்துண்டாக முடியுமா? எந்த ஒரு காரியத்துக்கும் காரணம் இருக்கவே வேண்டும். அக் காரணம் கடவுளேயாவர்.

கடவுள் ஆதி அந்தமின்றி என்றுமுள்ளவர். எல்லா அறிவும் வல்லமையுமுள்ளவர்.

நாங்கள் காணும், கண்டு [illegible] இவ்வுலகம் ஒரு காரியமாய் — ஆக்கப்பட்ட பொருளாய், இருக்கின்றது. ஆகையினாலே அதற்கோர் காரணம் வேண்டும்.

உலகின் அமைப்பு, அமைப்பின் ஒழுங்கு, ஒழுங்கின் சிறப்பு ஆதியவற்றைப் பார்க்கும்பொழுது அவ்வாறு அவை எப்படி உண்டாயின என்பதை வேறு எவ்வாற்றானும் விளக்கமுடியாதாகும். பேரறிவும் பேராற்றலுமுடைய ஒரு கடவுளால் ஆக்கப்பட்டனஎன்றே கொள்ள வேண்டியதாகின்றது.

அணுக்கள் எந்நேரமும் அசைந்தபடியே யிருக்கின்றன. அவை தாமாக அசையவில்லை. அவற்றை அசையச் செய்யும் அகன்ற அறிவுள்ள சக்தி ஒன்றுள்ளது. அதுதான் கடவுள்.

நாம் காணும் ஓர் சிற்பத்தைக் கூர்ந்த மதியுள்ள ஓர் சிற்ப சாஸ்திரியே செய்துள்ளான். அவனே அச்சிற்பத்தின் காரணன். அப்படியே இவ்வுலகில் அழகொழுகி விளங்க அமைக்கப்பெற்றுள்ள பொருள்களெல்லாவற்றுக்கும் கடவுளே காரணராயிருக்கின்றார்.

நாம் காணும் உலகுக்குக் கடவுளே மூல காரணராயிருக்கின்றார். அவரிடமிருந்தே எல்லாம் உண்டாகின்றன. அவை எல்லாம் அவரையேயடைகின்றன.

நீங்கள் உள்பொருள்களாய் வாழுகின்றீர்களா அல்லவா? நீங்கள் உள்பொருள்களாய் வாழுகின்றீர்களென்பது உண்மையானால் கடவுளும்உங்களைப் போலவே உண்மைப்பொருளாயிருக்கின்றார் என்பது உண்மையா யிருக்கின்றது. உலகத்தைக் கடவுள் படைக்கின்றார். அவ்வாறு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை

3-ம் பக்கத் தொடர்ச்சி

படைத்து அதற்கு உயிர் நாடியாய் உள்ளே மறைந்திருக்கின்றார். அவர் உங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுந்தருளியிருக்கின்றார்.

புலன்களாற் காணக்கூடிய பொருளாய்க் கடவுளிருக்கவில்லை. அகநோக்கால், அநுபூதியால் அவர் அறியக்கூடியவராயிருக்கின்றார். கடவுளின் திருவுள்ளம் என்றுமுள்ள மாற்ற முடியாத நியதியாய் விளங்குகின்றது. உங்கள் உள்ளங்களை அவருடைய திருவடிகளிற் சமர்ப்பியுங்கள். அப்பொழுது அவருடைய திருவுள்ளத்தை நீங்கள் அறியக்கூடியவர்களாவீர்கள்.

துன்பம் நிறைந்த இவ்வுலகில் கடவுளின் திருவருளின்படியே அடியார்கள் அருட்செயல்களைச் செய்து அருள் வாழ்க்கைவாழுகின்றார்கள்.

கடவுள் கட்டில்லாதவர். செயல்களாற் கட்டுப்படாதவர். தமது வெப்பம் காரணமாய் நிகழும் பலவேறு நிகழ்ச்சிகளால் எவ்வாறு சூரியன் தாக்கப்படுவதில்லையோ அவ்வாறே கடவுளும் தம்முடைய அருட்செயல்களால் தாக்கப்படுவதில்லை. உயிர்கள்மாட்டுள்ள கருணையால் அருட்செயல்களைக் கடவுள் செய்கின்றார்.

பகவான்என்னும் சொல்லில் 'பக' என்னும் பகுதி, கடவுளின் அறு குணங்களைக் குறிக்கின்றது. அவை (1) ஞானம், (2) வைராக்கியம், (3) கீர்த்தி, (4) அபிவிருத்தி, செல்வம், அருட்செல்வம், (5) சக்தி, (6) தர்மம் என்பனவாம்.

உண்மையுள் உண்மையாயிருக்கின்றார் கடவுள். கடவுளின் திருவுள்ளத்தை யார் அறிய முடியும்? பலவேறு வகையில் மக்கள் கடவுளை வழிபடுகின்றனர். ஆனுல் கடவுள் ஒருவரே.

— ஸ்ரீ சுவாமி சிவானந்தா

# பதி-பசு புண்ணியங்கள்

## பிறவிப் பயன்பெறச் செய்யவேண்டியவை

புண்ணியம் என்பது இரு வகைப்படும். அவை பதி புண்ணியம், பசு புண்ணியம் என்ப. பதி என்பது ஆன்ம இரட்சகராயிருந்து, ஆன்மாக்கட்கு முத்தி இன்பங் கொடுத்து, பேரானந்தத்தைக் கொடுக்கும் கடவுள். பசு என்பது ஆன்மா. எறும்பு முதல் மானிடர்வரை உள்ளவை ஆன்மாக்கள். ஆன்மாக்கள் எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதத்துடன் வெளிப்படுகின்றன.

திரு நா. சேனாதிராசா
யாழ். சை. சி. ச. தலைவர்

ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் செய்யும் புண்ணிய பாவங்கட்குத் தக்கபடி இறைவன் அருள் புரிகின்றார். எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவியே சிறந்தது. பகுத்தறிவு படைத்தது, ஞானத்தைப் பெறுந் தன்மைஉடையது. மோட்சம் பெறுவதற்கு ஞானமே மேலானது. ஆகையால்தான் மானிட சென்மம் விசேடமானது. மானிட சென்மம் எடுத்தபின் செய்ய வேண்டியது பதி புண்ணியம். பதி புண்ணியம் என்றால் என்ன. ஈசருக்குக் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தல், பூசை செய்தல், நித்திய நைமித்திகங்கள் ஏற்படுத்துதல், முன் உண்டான கோயில்கள் மடங்கள்சிதைவுற்று அழிந்து கிடந்தால் அவைகளைத் திருப்பணி செய்து திருத்துதல், பூசைகளில்லாமலிருக்குங் கோயில்களில் பூசை செய்வித்தல், நந்தவனம் உண்டாக்குதல் திருமஞ்சனக்கிணறு தோண்டுதல், கேணி வெட்டுதல், மூர்த்திக்குப் பூசைக்கு வேண்டிய உபகரணங்கள் கொடுத்தல், அமுதுக்கு வேண்டிய நெல் விளையும் வயல்களைக் கொடுத்துத் தர்மசாதனம் செய்தல்; பூசை தவறாது கிரமமாய் நடக்கும்படியாகத் திரவியம் சேமித்து வைத்தல்; சிவ பூசை செய்தல்; அபிஷேகத்திற்கும் நிவேதனத்திற்கும் வேண்டிய பாலைக் கொடுக்கும் பசுமடம் ஏற்படுத்துதல்; பசுவின் சாணி கொண்டு சென்று கோயிலை மெழுகுதல்; பூமாலை கட்டிக் கொடுத்தல், பூசைக்கு மலர் கொய்து கொடுத்தல்; கோயிற் பாத்திரங்களை விளக்கிக் கொடுத்தல், கோயிலைக் கூட்டுதல், விளக்குகட்குத் திரிகள் போட்டு எண்ணை ஊற்றித் தீபம் ஏற்றுதல், சுவாமி காவுதல் சுவாமிக்குக் குடை பிடித்தல், தேவார திருவாசகங்களை முறைப்படி ஓதுதல், [illegible]

கப் பிரதட்சணம் செய்தல் காவடி எடுத்துக் காவடியில் கட்டப்பட்ட பாலைப் பக்குவமாகக் கொண்டு சென்று மூர்த்திக்கு அபிடேகம் செய்வித்தல், அர்ச்சனை செய்தல், செடில் குற்றுதல், அலகுகுற்றுதல், கர்ப்பூரச் சட்டி தலையில் வைத்தெரித்தல், தீ மிதித்தல்,என்பவைகளாம். மேற் சொல்லப்பட்ட எந்தச் சிவ தொண்டைச் செய்தாலும் யான் எனதென்னும் செருக்கு அற்று எல்லாம் இறைவன் செயல் என்ற நம்பிக்கையுடன் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரண சுத்தியோடு செய்யவேண்டும் அப்படிச் செய்தால் 'உள்ளங் கவர் கள்வனுகியபெருங்கருணைத் தடங்கடல்' கிருபை பாலிப்பார். அப்படியில்லாது வேடிக்கைக்கும் விளையாட்டிற்கும் செய்தால் "குளிக்கப் போய்ச் சேறு பூசும் விதம்போலாகும்". இறைவனின் அருளும்கிடையாது. அதற்கு அத்தாட்சியாய் கதிர்காமத்தில் தீ மிதித்தவர்களில் எத்தனையோ பேர் சிவ நிந்தாட்சணைக்கு உட்பட்டு வேதனைப்படுகிறார்கள். முற்காலத்தில் சைவர்கள் கதிர்காமம் போய் எம்பெருமானைத் தரிசிக்க வரங்கேட்டு உத்தரவு பெற்றுப் போனார்கள். அப்பனை, தரிசிப்பதற்கு உத்தரவு கேட்டால்

தீ மிதிப்பதற்கு உத்தரவு வேண்டாமா? மெய்ஞ்ஞானம் படைத்த தெய்வச் சந்நிதியில் சொற்ப விஞ்ஞான அறிவைக்கொண்டு அஞ்ஞானிகள் தீ மிதிக்கலாமோ? இந்த அஞ்ஞானிகள் தாமுங் கெட்டு மூர்த்தி தலம், தீர்த்தம் என்னும் மகத்துவங்களையும் கெடுக்கப் பார்க்கிறார்களே. அதுவுமல்லாமல் பிற மதத்தினர் எள்ளி நகையாடத்தக்க செயல்களைச் செய்கின்றார்களே.

நாளொன்றிற்குக் கணக்கிலடங்காத் தீவினைகளைச் செய்யும் நாம் செருக்குற்றுச் செயல் செய்யச் சண்முகத் தெந்தை பொறுப்பாரோ? இனிமேலாவது இறைவன் செயல் என்று செயலாற்றுவோமாக.

அடுத்தது பசு புண்ணியம. ஆன்மாக்கட்கு பசி ஆற்றுதல், தண்ணீர் விடாயை நீக்குதல், ஏழைகட்கு இரங்கி அன்ன வஸ்திரங் கொடுத்தல், கல்வி கற்பித்தல் வெயிற் பாதைகளில் நிழல் கொடுக்கும். மரங்களை உண்டாக்குதல், கிணறு கேணி முதலானவை தோண்டுதல் தண்ணீர்த் தொட்டிகளில் தண்ணீர் நிரப்புதல் ஆ உரஞ்சிக் கற்களை நாட்டுதல், கால் நடைகளை நல்லாய் வளர்த்தல், யாதொரு ஆன்மாவையும் கொல்லாமை, தீங்கு செய்யாதிருத்தல், எல்லா ஆன்மாக்களும் நல்லாயிருக்க நினைத்தல் இப்படியான செயல்கள்தான் உயிர்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டுகள். இவற்றைச் செய்தே மானிடப் பிறவி எடுத்த பயனை அடைய முடியும்.

## சுதந்திர மலாயா

### முதல் மந்திரிசபையில் ஒரு தமிழர்

மலாயா சுதந்திரமடைந்துவிட்டது. 31 - 8 - 57 நள்ளிரவில் பெரும் ஆரவாரத்துடன் மலாயா மக்கள் சுதந்திரக் கொண்டாட்டங்களை ஆரம்பித்தனர். பிரித்தானிய சமராச்சிய நாடுகளுள் சுதந்திரமடைந்த பத்தாவது நாடாகின்றது மலாயா. ஸ்ரீ துங்கு அப்துல் இறக்மான் முதல் மந்திரியானார். அவர் அமைத்த மந்திரி சபையில் ஒரு தமிழரும் இடம்பெற்றுள்ளனர். அவர் சுகாதார மந்திரி திரு. வி. ரி. சம்பந்தன் அவர்கள் ஆவர்.

### துன்பத்தில் ஆழ்ந்தது நாடக உலகம

பெரும்புகழ் ஈட்டிய நடிகர் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் அகால மறைவால் நாடக உலகு துன்பசாகரத்துள் அமிழ்ந்தியது. இந்தியாவிலும் இலங்கையிலும் மிகப் பலர் தங்கள் அனுதாபத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இறந்தும் நாடகஉலகில் இறவாதிருக்கும் இவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் முயற்சியும் நடைபெறுகின்றது.

### பண்டத்தரிப்புப் பரபரப்பு

பண்டத்தரிப்புச் சைவாங்கில பாடசாலை ஆசிரியர் திரு. நடராசா என்பவர் பற்றிப் பெரும் பரபரப்பொன்றுண்டாயிருக்கின்றது. குறித்த ஆசிரியர் சைவ வித்தியா விருத்திச் சங்கர் மீது குற்றஞ்சாட்டியுள்ளார். சைவவித்தியா விருத்திச் சங்கம் அவர்மீது குறறஞ் சாட்டியுள்ளது. இவற்றின் விளைவாய்க் குறித்த பாடசாலை அரசாங்க மேற்பார்வையில் இப்பொழுது நடைபெறுகின்றது.

## புராணபடனம் தரும் பலன்

மக்களை நல்வழிப்படுத்தி மனித வாழ்க்கையை உயர்த்தி விளங்கச் செய்வது சமய வாழ்க்கையாகும். மனிதன் சமயத்திற்குப் புறம்பாகஎன்று வாழ்க்கை நடத்தத் தொடங்கினுனே அன்றே வாழ்க்கைகீழ்நிலையடையத் தொடங்கியது. சமயம் கற்பித்த நெறியில் வாழ்ந்து வந்த எமது மூதாதையரின் வாழ்க்கை எவ்வளவு மேலானதாக மதிக்கப்பட்டுவருகின்றது. எமது வாழ்க்கை அதற்கு எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கின்றது என்பதைச் சிந்திக்க வேண்டும்".

"சமய உண்மைகளை நாம் அறிந்து வாழ முன்வரவேண்டும். சமய உண்மைகளை அறிய எமக்கு உதவியாய் இருப்பவற்றுள் புராணமும்ஒன்றாகும். இப்புராணத்தைப்படிப்பதினுல் நாம் சமய உண்மைகளை அறிவதுடன் உலக நீதிகளையும் தெரிந்துகொள்ள முடியும், ஆறுமுகநாவலர் காலத்திலிருந்தமுறை மீண்டும் நம்மிடையே வர நாம் கோவில்களில் சைப் புராணங்களைப்படித்து விளங்கி வரவேண்டும்" என்று சித்தாந்தப்புலவர் திரு. சோமசுந்தரம் அவர்கள் பள்ளம் புலம் முருகமூர்த்தி கோயிலிற கந்தபுராணபடன ஆரம்பத்திற் பேசும்போது குறிப்பிட்டார்.

## சாதி குல பேதம் இல்லாதார் சைவர்

### ஒன்றே குலம் அவர்களுக்கு ஒருவனே தேவன்

### சைவமகாநாட்டில் வெளியிடப்பெற்ற கருத்து

—0—0—

கீரிமலையில் நடந்த அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பேசும் போது "ஆலயத்திற்குள் செல்லக் கூடியவர்கள் யார் என்ற பிரச்சினை இப்போது சில வட்டாரங்களில் எழுந்துள்ளது. தீண்டாதார் எனப்படுவோரைக் கோயிலுக்குள் அழைத்துச் செல்லக் கிளர்ச்சியும் செய்கிறார்கள். தீண்டாதோர் எனப் படுபவர்கள் யார்? ஆலயத்திற்குள் செல்ல நமக்கெல்லாம் அருகதையுண்டா என்பதையும் கவனிக்கவேண்டும். நல்ல காரியங்களை தருமமான செயல்களைத் தீண்டியும், அறமற்றவைகளைத் தீண்டாமலும் இருப்பவர்களே தீண்டாதவர்களாவர் அவர்களே கோயிலினுட் சென்று வழிபட அருகதையுடையவர்கள்.

வைதிகம் அறிவைத் தூய்மைசெய்வது. அது சிவசம் பந்தம் பெறுவதற்கு உதவியாயிருக்கவேண்டும் இப்படியான வைதிகம்தான்—வேத நெறிதான் — சைவத்துக்கு அடிப்படையானது. வைதிகம் சைவத்தில் சென்றடைந்தே முற்றுப்புள்ளி பெறும். சைவைதிகம் அணுக்குண்டில் முடிவுபெறும்.

வைதிக வழியில் நின்று சிவசம்பந்தம் பெறும்வழியை ஆறு வகையாக வகுத்துள்ளனர். வைதீகத்தின் வழி வராத சைவத்தையே அவை திகமென்பர். வைதிகர் தம் புத்தியைத் தாம் உபயோ

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. வண்ணார்பண்ணை கிழக்கு பொன்னையா சுப்பிரமணியமும் பெண்
2. ஷெ சிவகாமசுந்தரி
வழக்காளிகள்

இல. M B 803

எதிராக

1. வண்ணார்பண்ணை மேற்கு சாகுல் கமீட் முகம்மட் லெவ்வையும் பெண்
2. ஷெ மா மூடாவும்
3. ஷெ முகம்மட் மீராசாகிப் முகம்மட் இஸ்மேலும்
4. ஷெ பெண் இறகுமானுவும்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 803ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1957 ஞு ஐப்பசி௴ 9உ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 1265-00ம் இதில் ரூபா ரூபா 1000க்கு 7-2-55 திகதி தொடக்கம் 10-5-56 வரைக்கும் வருடமொன்றுக்கு 100-க்கு 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 192-02.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வண்ணார் பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை பரந்தன் புளியடி நிலப் பரப்பு ஒன்றேகால் ($1\frac{1}{4}$) வீடும் செய்பயிர்கள் வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி சண்முகரத்தினம் வடக்கு முகியதீன் சாய்பு முகம்மட் மேற்கு மானிப்பாய் றேட்டு

## காஷ்மீரிலும் பாக்கிஸ்தானிலும் வெள்ளப் பெருக்கு

என்றும் அறியாத வெள்ளப் பெருக்கொன்று காஷ்மீரில் உண்டாகி ஐந்து இலட்சம் மக்கள் வீடிழந்தனராம். பத்து அடி ஆழத்தில் தண்ணீர் பரவியுள்ளது என்று குறிப்பிடப்படுகின்றது. பாக்கிஸ்தானிலும் வெள்ளப் பெருக்கால் பெருஞ்சேதம் உண்டாயிருக்கின்றதெனச் செய்திகள் சொல்லுகின்றன.

## கந்தளாய்க் கரும்புக்கு உருசிய உதவி

கந்தளாய்ப் பகுதியில் ஆறாயிரம் ஏக்கர் நிலத்தில் கரும்பு செய்ய உணவு அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்நிலத்தைப் பண்படுத்தும் பொறுப்பை இலங்கைக்கு உதவி செய்யும் முறையில் உருசிய அரசாங்கம் ஏற்றுக் கொண்டதாம். இதற்கு வேண்டிய யந்திரங்களும் பிற பொருள்களும் உருசியாவிலிருந்து வருவிக்கப்படும். குறித்த நிலம பண்படுத்தப்பட்ட பின் மேற்படி யந்திரங்களும் பிறகருவிகளும் இலங்கைக்கு நன்கொடையாகக் கொடுக்கப்படுமாம்.

தெற்கு N M. சுல்த்தான் முகியதீன் கட்சியார். இதடங்கலும்.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
26-8-57.

## திருக்கேதீச்சரத்தில் திருமணம்

சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களின் இரண்டாம்புத்திரி, செல்வி அமிர்தவல்லிக்கும், திருவளர் செல்வன் விசுவநாதன் செல்வரத்தினத்திற்கும், சென்ற ஆவணித் திங்கள் கடு ஆம் நாள் (30-8-57) வெள்ளிக்கிழமை காலையில் வந்த சுபமுகூர்த்தத்தில் மன்னார் மாதோட்டத்தில் கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதர் முன்னிலையில் திருமணம் செய்யப்பெற்றது.

பல குருக்கள்மார் முதலிய பெரியோர் நிச்சயித்தபடி ஓர் சிவாலயத்தின் திருமுன்னிலைக்கேற்பப் பிள்ளையார் பூசையில் சுருக்கமாகச் செய்யும் விவாகச் சடங்குகள் நிகழ்த்தப்பெற்றன. விவாகம் நிறைவுற்றதும் தம்பதிகளின் சங்கற்பத்தில் உருத்திராபிஷேகம், விசேஷ பூசை பஞ்ச முகார்ச்சனை முதலியவை நடைபெற்றன.

ஐந்து குருக்கள்மார் ஓரேநேரத்தில் ஆதிமூலத்தில் நின்று மந்திரம் ஓதிப் பஞ்சாலாத்தி எடுக்கும் காட்சி மக்களுக்கு ஓர் புதுமையாகி மகிழ்ச்சியூட்டியது.

கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதன் திருவருளால் மணமக்கள் எல்லா நலன்களும்பெற்று இன்புற்று வாழ்வார்களாக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு வழக்கு இலக்கம் M B 1206

சங்கானை கிழக்கு சண்முகம் தம்பையா — வழக்காளி

எதிராக

சங்கானை கிழக்கு சின்னத்தம்பி இராசதுரை இப்பொழுது மலாயாவைச் சேர்ந்த 44 சலன ராசா குலிம் கெடா இவரின் அற்றோணித் தத்துவகாரன்

சங்கானை கிழக்கு சேழ்ச்றோட் அம்பலவாணர் நவரத்தினம்
எதிராளி

மேற்குறித்த கோட்டார் குறித்த இலகக வழக்கில் எனக்கனுப்பிய கமிஷன் கட்டளைப்பிரகாரம் இதன்கிழ்க காணப்படும் ஆதனம் 1957-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிமேற்கு மானிப்பாய்க கோவிற்பற்று சண்டிருப்பாயிறை ஆல்நின்றதினி, நெல்ப் பரப்பு பதினெட்டுடன் எட்டில் ஐந்து (18 5/8) எல்லை கிழக்கு வயித்திலிங்கம் பெண் காலஞ்சென்ற செல்லாச்சியின் உரிமைகாரரின் ஆதனம். வடக்கும் தெற்கும் கணபதிப்பிள்ளை பெண் தையல்நாயகத்தின் ஆதனம் மேற்கு சின்னையாபெண் இலட்சுமியின் ஆதனம் இதடங்கலும்

நீர்வைத்தொகை:

முதலவட்டி ரூபா 402ம் இன்னும் ரூபா 250க்கு 3-9-56 துவககம் 2-11-1956 வரையும் ஞு 1க்கு 100க்கு 12 வீத வட்டியுப் அதன்பின் மொத்தத்தொகைக்கு இறுக்கும் திகதி வரையும் ஞு 1-க்கு 100ககு 5 வீத வட்டியுப் கோட்டுச்செலவு ரூபா 125-90ப் இதில்இறுக்கப்பட்ட ரூபா 75கழித்துமிகுதியும் வேறுவிபரம் அறிய விரும்பின் வழக்காளியின் பிறக்ரர் ஓட்டுமடம் மெஸ், எஸ். கனகசபை அவர்களிடம் அறியவும்.

பெ. முத்துத்தம்பி,
வேந்தீஸ் கமிஷனர்

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்
1957-ம்ஆ செப்டெம்பர்௴ 4உ.
M 101, 6-9-57,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கரம்பன் ஊர்காவற்றுறை V. சின்னத்தம்பி ஆறுமுகம்
வழக்காளி,

எதிராக

இல. M B 1591

வேலணை மேற்கு முத்துத்தம்பி குலசேகரம்பிள்ளை
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1591ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957-ம்ஞு ஐப்பசி௴ 5ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: - முதல் வட்டி ரூபா 1486ம் ரூபா 750க்கு 10-4-1957 தொடக்கம் 4-6-1957 வரை 15 வீதமான வட்டியுப் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 182-52 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை "நாய் தூக்கின கலடு, புண்ணியன் புலமும் மறுபிரிவுகளும்' பர. நெ. இல இருபதரை ($20\frac{1}{2}$) கல் விடும் கிணறும் செய் பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு நாகலிங்கம் ஆறுமுகத்திற்குரிய வாதனம், வடக்கு நாகலிங்கம் பரமசிவத்திற்கும் தியாகராசா பெண் இலட்சுமிப்பிள்ளைக்குமுரிய வாதனங்கள், மேற்கு ஆறுமுகம் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும், சபாரெத்தினம் பெண் விசாலாட்சிக்குமுரியவாதனங்கள், தெற்கு சபாரெத்தினம் பெண் விசாலாட்சிக்கும் நாகலிங்கம் ஆறுமுகத்திற்குமுரிய வாதனங்கள். இதடங்கலிற் சொரியலாயரைவாசி, இதன் பதிவு C/ 244/112,

1957-ம்ஞு ஆவணி௴ 22-ம்திகதி

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்,
M 100 6.9.

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு வழக்கு இல. 5527.

தொண்டமானுறு, யேசேப்பு விஷயரத்தினம் சாமுவேல்
—வழக்காளி.

தொண்டமானுறு, இராமுப்பிள்ளை ஆறுமுகம் கந்தசாமியும் பெண் நவரத்தினம்மாவும்.
—எதிராளிகள்.

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த திர்வையின்படியும் குறித்தகோட்டார் எனக்கனுப்பிய கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்க் காணும் ஆதனங்கள் 1957-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கமாகக் குறித்த ஆதனங்களிடமாக விருந்து என்னுல் பிரசித்த [illegible] விற்கப்படும்.

### ஆதன விபரம்:

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமாட்சிப்பகுதி உடுப்பிட்டி கோயிற்பற்று உடுப்பிட்டி புனரைக்கலட்டி நிலப் பரப்பு $58\frac{1}{4}$ மொறக்குளத்துக்குக் கிழக்கு நிலப்பரப்பு 16, ஆகக் கூடிய நிலப்பரப்பு 74 1/4. இதில் தெற்குப் புறமாக நிலப்பரப்பு 35. குளி 5 2/5. இதில் மேற்கரை வாசியின் கிழக்கரைவாசிக்கு நிலப்பரப்பு 8, குளி 14 7/20. எல்லை கிழக்கு எதிராளிகளுக்குரிய இதன் கீழ்க்காணும் 3-ம் ஆதனம், வடக்குறேட்டு, மேற்கு வயிரமுத்து ஆறுமுகத்துக்கும் சீனியர் அப்பாத்துரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு இதன்கீழ்க்காணும் 2-ம் ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம். பனைகள், வடலிகள் கிணறு அடங்கலும்

2. ஷெ சீராவலைக்கலட்டி நிலப் பரப்பு 68. இதில் வடக்குப் புறமாக நிலப்பரப்பு 21, இதில்மேற்குப் புறமாக நிலப்பரப்பு 13 எல்லை கிழக்கு செல்லப்பா குழந்தைவேலுவின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய வாதனம்; வடக்கு மேலே சொல்லப்பட்ட 1ம் ஆதனம், மேற்கு வயிரமுத்து ஆறுமுகத்துக்கும், மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு செல்லத்துரை நாராயணசாமிக்குரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் அடங்கலும்,

3. ஷெ புனரைக்கலட்டி நிலப் பரப்பு 58 1/4 மொறக்குளத்துக்குக் கிழக்கு நிலப்பரப்பு 16. இது 1945-ம் ஆண்டு செப்டம்பர்௴ 5-ந்திகதி உலாந்தாமேஸ்தர் திரு. V. சீவரத்தினம் அவர்களால் 176ம் இலக்கதகில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நிலப்பரப்பு 17 குளி 14 22/32, இதில் குறித்த படத்தின் 1-ம் இலக்கத் துண்டுக்குநிலப்பரப்பு 8, குளி 16 11/32 இதுவும் 2-ம் இலக்கத் துண்டில் மேற்குப் புறமாக 3/5 பங்குக்கு நிலப்பரப்பு 5 குளி 6 33/160ம் ஆகக்கூடிய நிலப்பரப்பு 14 குளி 4 22/40 இதுவும் 4-ம் இலக்கத் துண்டில் கிழக்குப் புறமாக 2/5 பங்கிற்குரிய நிலப்பரப்பு 3 குளி 10 11/80 இவை இரண்டுஞ் சேர்ந்த நிலப்பரப்பு 17 குளி 14 11/16 இதற்கு எல்லை கிழக்கு இராமசாமி கந்தசாமிக்குரிய ஆதனம், வடக்கு றேட்டு, மேற்கு மேலே சொல்லப்பட்ட முதலாம் ஆதனம், தெற்கு மேலே சொல்லப்பட்ட 2-ம் ஆதனமும் மறுபேருக்குரியவாதனமும் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் கிணறு அடங்கலும்.

தீர்வைத் தொகை: ரூ 10,577 சதம் 75, ரூபா 7000க்கு 5-9-56 தொடக்கி 29-11-56 வரை 10சத வட்டி 163-22. ரூபா 10,740 சத. 97க்கு கொமிஷன் திகதி வரை 5 சத வட்டி 392 30, கோட்டுச் செலவு 332 77. மொத்தம் 11,466 04.

வி. முதலியார் குழந்தைவேலு,
கொம்மிஷனர்,
பருத்தித்துறை, 4-9-57.
M, 106, 6-9-57,

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 8—9—57 —— 14—9—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தேகசுகம் இன்னமும் தொடர்ந்து பழுதாயிருக்கின்றது. வயிற்றுக் கோளாறுகளுக் கிடமுண்டு. இரகசியப் பகைவர்மூலம் தொந்தரவுகளுக்கிடமுண்டு. குடும்பச் சூழலிற் பிழை எண்ணங்களுக்கும் கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமில்லாமலில்லை.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இனத்தவர்களுடன் இந்த வாரம் சண்டைகளுக் கிடமுண்டு மாதாவழி இனத்தவர்களால் தொக்தரவுகளுக்கும் இடமுண்டு. பணத் துறையில் நல்ல வாரம். ஆனுல் செலவதிகரிக்கும். வார இறுதியில் பகைவர் அழிவுக்கும் இடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

ஒரு நல்ல வாரம். எதிர்ப்பு அற்றுவிடும். உம்முடைய சொந்தச் சிக்கல்கள் சில நீக்கப்படும். காணிகள் காணிப் பொருள்கள்மூலம் இலாபங்களுக்கும் இடமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

நண்பர்கள் இனத்தவர்களுடன் சண்டைகள் பிழை எண்ணங்களுக்கு இந்தவாரம் இடமுண்டு. ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம். ஞாயிறும் திங்களும் மிகத் தொந்தரவானவையாயிருக்கும். வியாழக்கிழமையின் பின் படிப்படியான திருத்தம் உண்டாகும்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

இந்தவாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு. இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமூண்டு. ஆனுல் உத்தியோக அல்லது வியாபாரக் கருமங்களுக்கு நல்லவாரம். செவ்வாய் புதனும் வியாழன் முற்பகலும் கவனமாய்க் கழிக்கவும்,

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தேகசுகம் இன்னமும் சிக்கலாகவே யிருக்கும். உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது. வழக்கத்திலும் வேலை கூடுதலாயிருக்கும் பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்ல வாரம். வியாழன் பிற்பகல் வெள்ளி சனி கவனமாய்க் கழிக்கவும்.

**துலாம்**, சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

சுகவீனங்களுக்கிடமூண்டு. குடும்பக் கருமங்களும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டா. வரவு செலவைச் சமாளிக்க மாட்டாது வருத்தப்படுவீர். இனத்தவர்கள் சண்டை தொடுத்து நிற்கக் கூடும்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணத்துறையில் நல்ல வாரம், ஆனுல் மனச் சமாதான மிருக்க மாட்டாது. புதுமுயற்சிகள் நல்ல பலனைத் தரும். உம்முடைய சொந்தக் கருமங்களிற் [illegible] ப்புக்க ளிருக்கும். ஆனுல் [illegible] அவற்றை நீக்கக்கூடியதாகும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

குடும்ப நிலைமைகள் இந்த வாரம் திருந்தவேண்டும். தனலாபமும் நிச்சயம். ஆனுல் மனச் சமாதானமிருக்கமாட்டாது. பிதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது கோபம் மூட்டக்கூடும்,

**மகராராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

ஒரு தளப்பமான வாரம், தேகசுகம் தொடர்ந்து நல்லாயிருக்க மாட்டாது, ஆனுல் எந்தக் கருமத்திலும் ஆபத்தான விளைவுகள் ஏற்படமாட்டா. கண் நோய்கள் பற்றிக் கவனமாயிருக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்பக் குழப்பங்கள் தவிர இந்தவாரம் நல்லதாயிருக்கும். கிளர்ச்சிகளும் எதிர்ப்புக்களும் உண்டாககூடும். ஆனுல் உம்முடைய முயற்சிகளில் நீர் சித்தியடைவீர். நீர் அவர்மீது வைத்திருக்கும்நம்பிக்கைக்கு ஒருசினேகிதன் துரோகம் செய்யக்கூடும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

ஒரு நல்லவாரம். குடும்ப நிலைமைகள் திருந்த வேண்டும். புதுமுயற்சிகள் மிகுந்த சித்தியடையும், தனலாபங்களும் நிச்சயம். ஆனுல் [illegible] கயாயிருக்கவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் திருநெல்வேலி

## ஞானப்பிரகாச முனிவர்

—:0:—

### சிவஞான சித்தியார் உரை

ஞானப்பிரகாச முனிவர் எழுதிய சிவஞான சித்தியார் உரையினை திருமயிலை சைவத்திருவாளர் C. V ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் அச்சிட்டு வெளியிட முன் வந்துள்ளார்கள். இவ்வரிய வுரை வெளிவருதற்கு சைவத் தமிழ் மககள் சிறப்பாக ஈழநாட்டுச் சைவமக்கள் இயன்ற பணவுதவி புரிவது சிறந்த சிவதொண்டாகும். பணவுதவி புரிவோர்க்கு அவர்கள் உதவிய பணத்துக்குத் தக்கவாறு புத்தகங்கள் அடக்கவிலைக்கு வழங்கப்படும். பணம் அனுப்பும் அபிமானிகள் அதனை சைவபரிபாலனசபைச் சமயப் பிரசார அமைச்சருக்கு அனுப்பி வைக்குமாறு விநயத்துடன் வேண்டுகின்றேன்.

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 26-8-57,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசாரஅமைச்சர்

M. 96 30-8, 4-10-57



உ
சிவமயம்

யாழ்ப்பாணம்

## சைவபரிபாலன சபை

### 69-வது வருடாந்தக் கூட்டம்

மேற்படி வருடாந்தக் கூட்டம் ஏவிளம்பி ஹு ஆவணி மீ 29-உ (14—9—57) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்திற் கூடும்.

நிகழ்ச்சிகள்

1 தேவாரம்
2 சென்ற வருடாந்தக்கூட்ட வரலாறு வாசித்தல்.
3 செயலாளரின் அறிக்கை.
4 பொருளாளரின் வரவு செலவுக் கணக்கு.
5 C நிருவாகசபையின் C பிரிவு அங்கத்தவர்கள் தேர்தல்
6 புதுவருட உத்தியோகத்தர் தேர்தல்
7 பிரேரணைகள்
8 நன்றியுரை

☞ குறிப்பு: பிரேரணைகள் 30-8-57-க்கு முன் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆ. தனபாலசிங்கம்
கௌரவ செயலாளர்

ஆனைப்பந்தி
21-8-57.



யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


### எக்காலத்தவருக்கும் யாவருக்கும் உரியவை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேதப் பொருள்களை நன்கு ஆராய்ந்து ஆழ்ந்து கற்போமானல் எல்லாச் சமயப் பொருள்களையும் அவை விளக்குதலைக் காண்பதோடு எல்லாச் சமயத்தவர்களோடும் அன்பாயும் ஒற்றுமையாயும் வாழலாம் என்பதையும் அவை விளக்குவதையும் காணலாம். பிற சமயத்தவர்களும் அறிந்து அதிசயிக்கத்தக்க பொருள்களை வேதங்கள் விளக்குவதனலேயே உலகிலுள்ள பல பெருமக்களின் உள்ளங்களை அவை ஈர்த்துள்ளன. மாக்ஸ்முல்லர் முதலிய பல பேரறிஞர்கள் தங்கள் வாழ்நாள்முழுவதையுமே வேதங்களுடன் பிற சமஸ்கிருத நூல்களைக் கற்பதிற் செலவழித்துள்ளார்கள். உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும் கலாசாரங்களுக்கும் வேதங்களே தாயகமாய் விளங்குகின்றன என்று அவர்கள் அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள்.

(காஞ்சீபுரத்தில் நடந்த வேதபாஷ்ய மகாநாட்டில் ஸ்ரீ அக்நிகோத்திரம் இராமானுசாரியர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.)

—0—

### சாதி குல பேதம்...

4-ம் பக்கத் தொடர்ச்சி

கிப்பவர். சைவர் தம் புத்தியை அடகு வைப்பவர். வைதிகனுக்குச் சாதிப்புத்தி போகாது. இந்தப் புத்தி போகாதிருப்பதிலைலே அப்புத்தியைச் சரிவர உபயோகிக்கப் பயன்படுவதே வர்ணாச்சிரம தர்மம். சைவத்திலே அதற்கு முக்கியத்துவமில்லை. அதற்குக் காரணம் சைவர் சாதி குல பேதத்தினுற் பாதிக்கப்படாதவர்கள் என்பதாகும். சாதியிற் சமயமே அதிகமென ஆறுமுகநாவலர் எழுதியுள்ளார். உயர்ந்த சைவத்தை அடைந்தவர்களுக்கு இந்தப் புத்தியில்லை ஆனல் வைதீகர்கள் வர்ணசிரம தர்மத்தில் கவனமாயிருக்க வேண்டும். சைவர் அதனுற் பாதிக்கப்படமாட்டார்கள்.

சிவசம்பந்தமுடையவர்களே கோயிலை அடையலாம் மற்றவர்களுக்கு அங்கு இடமில்லை. சந்நிதியில் சிவசம்பந்திகள் எல்லோருடம் ஒன்றே குலமாக விளங்குவர் அவர்கள் ஒரு தேவனைத் தான் வணங்குவர். ஒன்றே குலம் என்பது சைவத்துக்குரியதாகையால் அதை வைதீகனும் உபயோகிப்பது தவறு.

இப்போது நாம் சைவத்தைப்பற்றிப் பேசமுடியாது. அவைதீகத்திலிருந்து விடுபட வேண்டியதே அவசியமானது என்று கூறினர்.

—0—

### விவேகானந்த சபை வாலிபர் மன்றம்

ஆவணிச் சதுர்த்தித் திருநாளில் (28-8-57) விவேகானந்த சபை இளைஞர் இயக்கத்தினர் ஓர் வாலிபர் மன்றத்தை ஆரம்பித்தனர். இம்மன்றத்தில் சொற்பொழிவுகள், வாதங்கள் முதலியவை நடைபெறச் செய்து இளைஞரின் பேச்சு வன்மை, மதிக் கூர்மை ஆதியவை வளர்க்கப் பெறும்.

### பீதி உண்டாக்குகின்றது பாதாவியா

பாதாவியாக் குடியேற்றப் பகுதியைப் பார்க்கப் போனர் அப்பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு சி. சுந்தரலிங்கம். அவரை வழிமறித்துப் பலாற்காரப் பிரயோகஞ் செய்ய முற்பட்டனர் குடியேற்றத் திட்டத்திலுள்ளவர்கள். பொருத்தமானது எதுவாயினும் அதுபற்றி யாராலும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.


அதன்பின் அப்பகுதிக்குக் காணி விற்கச் சென்ருர் அனுராதபுரம் அரசாங்க உதவி அதிபர் திரு. பத்மநாதன். ஏலத்தில் விலை கூறும்படி கேட்டார். அரசாங்க நிலம் ஆட்சிப்பண்ணி வந்தவர்கள் விலை கேட்க மறுத்தார்கள். மறுத்ததுமல்லாமல் தாங்கள் ஆட்சிப்பண்ணிய காணியை விடமுடியாதென்று அச்சுறுத்தியும் நின்ருர்கள். மற்றவர்களைக் கேட்கும்படி சொன்னர் உதவி அரசாங்க அதிபர். விலை கூறினேரைப் பயமுறுத்திக் கூக்குரலிட்டார்கள் குறித்த ஆட்சிக்காரர். திரு சுந்தரலிங்கத்துக்குச் செய்த செயலைக் குறிப்பிட்டு அரசாங்க அதிபரையே எச்சரிக்கை செய்தார்களென்று சொல்லுகின்றது செய்தி ஒன்று.

### யாழ்ப்பாண நகர சபையில் வாக்கு வாதக் கிளர்ச்சி

யாழ்ப்பாண நகர சபையின் சென்ற கூட்டத்தில் அதற்கு முந்திய கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்ட பொழுது சேவகர் ஒருவர் கண்காணியாக்கப்பட்ட தொடர்பில் விகிதம் என்ற சொல்லுக்குப் பதிலாய்ச் சம்பளம் என்று திருத்தி எழுதுமாறு ஸ்ரீ அல்பிறட் ரீ துரையப்பா ஓர் பிரேரணை பிரேரித்தார். திரு. எஸ். சி மகாதேவா அதை எதிர்த்தார். எதிர்ப்பை ஆதரித்துப்பேசினர் முதலியார் செ முத்துத்தம்பி. அவ்வாறே பேசினர் திரு. எம். கார்த்திகேசன். காரசாரமான சொற்கள் உபயோகிக்கப் பட்டன. திருத்தப் பிரேரணை ஏற்றுக் கொள்ளப் பட்டது.

### பண்டத்தரிப்புப் பாடசாலைபற்றிப் பெற்ருேர் கருத்து

பண்டத்தரிப்புச் சைவாங்கில பாடசாலையை அரசாங்கம் எடுத்து நடத்துவதுபற்றித் தங்கள் கருத்தைத் தெரிவித்து அச்செயலை எதிர்க்கும் பொருட்டு அப்பாடசாலை மண்டபத்திலேயே திரு. ச. ச. மூர்த்தி அவர்கள் தலைமையில் பெற்ருேர் கூட்டமொன்று நடைபெற்றது. கல்விமந்திரி இப்பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்தை எடுத்திருப்பதாக அறிந்து வருந்துகின்ருேம். உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்க பாடசாலைகளாக்கக் கல்வி மந்திரி செய்யும் செயல்களைச் சைவமக்கள் யாவரும் எதிர்க்கின்றனர். சமய சுயாதீனம் மொழிச் சுதந்திரம் என்பவை வளர்ச்சியடைய வேண்டிய நேரத்தில் கல்வி மந்திரி இப்படிச் செய்தமை தீராத துயரத்தை உண்டுபண்ணியுள்ளது என்று குறித்த கூட்டத்திற் கூறப்பட்டது.




வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 6-9-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org